Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04 விலை ரூபா: 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 01 மார்கழி (14 - 12 - 1990) வெள்ளிக்கிழமை ஓசை 289

## கிறிஸ்மஸ் வாழ்த்துக்களாக தமிழீழ மக்கள் இன்னல்கள்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவநடவடிக்கைகளால் தமிழீழ மக்கள் அனுபவித்துவரும் இன்னல்களைச் சித்தரிக்கும் புகைப்படங்களைக் கொண்ட கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டைகளை லண்டனில் உள்ள தென்னிந்தியத் திருச்சபை அங்கத்தவர்கள் தயாரித்துள்ளனர்.

மரங்களின் கீழும், சிறுகூடாரங்களின் கீழும் அகதிகளாக அல்லற்படும் மக்கள், பதுங்கு குழிகளில் பதுங்கும் சிறார்கள் போன்ற (4ஆம்பக்கம் பார்க்க)

### சிங்களவர் ஆக்கிரமித்த தமிழர்

# தாயகத்தை தாரை வார்க்க 'தமிழ் குழுக்கள்' ஆலோசனை

(கொழும்பு)

வடக்கு க்கிழக்கு மாகாணத்திலுள்ள சிங்களவர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளைப் பிற சிங்கள மாகாணங்களுடன் இணைப்பதற்கு வடக்குக் கிழக்கு இணைப்புத் தொடர்பாகக் கொழும்பில் முஸ்லிம் குழுக்களுடன் பேச்சுவார்த்தை நடத்திய தமிழ்க்குழுக்கள் ஆலோசனை கூறியிருக்கின்றன.

இவ்வாறு தமிழ்க்குழுக்கள் சிங்களப் பகுதிகளுடன் இணைப்பதற்கு ஆலோசனை வழங்கிய பிரதேசங்கள் சிங்களக் குடியேற்றங்கள் மூலம் ஆக்கிரமிக்கப்பட்ட தமிழரின் நிலப்பரப்புக்களாகும்.

ஏற்கனவே எழுபதுகளில் சிறிலங்கா அரசாங்கம் தேர்தல் தொகுதி எல்லை நிர்ணயக் கமிஷனை அமைத்தபோது கமிஷனின் முன் சாட்சியமளித்த அப்போதைய வவுனியா தொகுதி தேசியப் பேரவை உறுப்பினர் எஸ்.எம். செல்லத்தம்பு சாட்சியத்தின் அடிப்படையில் இது கால (4 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்குக் கிழக்கு மாணவருக்கு விசேட க. பொ. த. சா. பரீட்சை

(கொழும்பு)

வடக்குக் இழக்குப் பகுதிகளில் இருந்து இந்த வருடம் க. பொ. த. சாதாரண தரப் பரீட்சை எழுத முடியாமல் போன மாணவர்களுக்காக விசேட பரீட்சை ஒன்று நடத்தப்படும் என்று பரீட்சை ஆணையாளர் ஆகர் வெத முல்ல அறிவித்துள்ளார்.

இதுபற்றிய பணிப்புரைகள் இடைத்ததும் இந்தப் பரீட்சைக்கான திகதி அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## விசேட பரீட்சை நடத்தாவிட்டால் மாணவர் அனுமதியில் வெற்றிடம்

(யாழ்ப்பாணம்)

வடக்குக்கிழக்குப் பகுதியில் பெப்ரவரி மாதத்துக்கு முதல் உயர்தரப் பரீட்சைகள் நடாத்தப்படாது விடில் யாழ். பல்கலைக்கழகத்திற்கு ஒரு ஆண்டு மாணவர் அனுமதி வெற்றிட நிலையை அடைய வேண்டிய நிலை ஏற்படும் என்பதால் அடுத்த பெப்ரவரி மாதத்துக்கு முன்பு பரீட்சை வைக்கப்பட வேண்டும் என கல்வி அமைச்சை கேட்டுக் கொள்வது என யாழ். பல்கலைக்கழக மூதவை தீர்மானித்துள்ளதாக பல்கலைக்கழக துணைவேந்தர் (4 ஆம் பக்கம் பார்க்க)

## காசோலைகள் 6மாதம் செல்லுபடியாகும்

(கொழும்பு)

வடக்குக் கிழக்கில் விநியோகிக்கப்படும் அரசாங்க காசோலைகள் ஆறுமாதம் வரை செல்லுபடியாகும் என மத்திய வங்கி அறிவித்துள்ளது.

வடக்குக் கிழக்கில் நிலவும் நிலைமையினால் அங்கு காசோலைகள் மாற்றுவதற்கு ஏற்படும் தாமதங்களைத் தொடர்ந்தே இந்த ஏற்பாடு செய்யப்பட்டதாக மத்திய வங்கி அறிவித்துள்ளது.

### மாலையில் சதியில் ஈடுபட்ட

## 33 புளொட் உறுப்பினரை அழைக்கக் கோரிக்கையாம்

(கொழும்பு)

மாலைதீவில் சதிப்புரட்சியில் ஈடுபட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள புளொட் உறுப்பினர்கள் 68 பேரில் 33 பேரை திருப்பியழைத்துக் கொள்ளும்படி அந்நாட்டரசு சிறிலங்காவை கோரியுள்ளதாக நேற்று நடந்த வாராந்தசெய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா தெரிவித்தார். ஜனாதிபதி இது பற்றித்தீர்மானித்த பின்னரே எத்தகைய நடவடிக்கை எடுப்பது என்பது பற்றிமுடிவு செய்யப்படும் என்றும் கூறினார்.

### தொண்டர் ஆசிரியர் நிரந்தர நியமனம்

## நேர்முகப் பரீட்சைக்கான கால அட்டவணை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குதல் தொடர்பான நேர்முகப் பரீட்சை இம்மாதம் 19ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் 29ஆம் திகதி சனிக்கிழமை வரை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் காலை 8-30மணி தொடக்கம் மாலை 4 மணி வரை கோட்ட ரீதியாக நடைபெறவுள்ளது:

பருத்தித்துறைக் கோட்டத்திற்கு 19, 20, 21 ஆம் திகதி (4 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் தமிழர்கள் கடத்தல் படுகொலைகள் தொடர்கின்றன

(யாழ்ப்பாணம்)

திருமலை நகரில் தமிழர்கள் பதின்நான்குபேர் இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டுள்ளார்கள். இவர்களில் மூதூர் தபால் நிலைய அதிபரும், கட்டைபறிச்சானைச் சேர்ந்த குணசீலதாஸ், தம்பலாகாமத்தைச் சேர்ந்த ராஜி என்பவரும் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் பற்றிய தகவல் ஒன்றும் இதுவரை தெரியவில்லை.

மேலும் திருக்கோணமலை நகரப்பகுதியில் பொலிஸார் அடிக்கடி சுற்றிவளைத்து இளைஞர்களையும், யுவதிகளையும் விசாரணைக்காக அழைத்துச் செல்கின்றார்கள்.

அதேவேளை கிண்ணியா-உப்பாறு பகுதியில் மூன்று தமிழர்களும், கிண்ணியா இறங்குதுறையில் ஒரு தமிழரும ஊர்காவல்படையால் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளனர்.

## ஜனசக்தி முத்திரை வைப்பிலிட தேசிய சேமிப்பு வங்கி வசதி

(குருநகர்)

சேமிப்பில் இடும் ஜனசக்தி முத்திரைகளை பொதுமக்கள் வைப்பில் இட தேசிய சேமிப்பு வங்கி வசதி செய்துள்ளது:

இதன்படி ஒவ்வொரு திங்கட்கிழமையும் யாழ். தேசிய சேமிப்பு வங்கியில் இதற்கான கருமபீடம் ஒன்று இயங்குமெனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த ஆறுமாதங்களாக தபால் அலுவலகங்கள், வங்கிகளில் சேமிக்கும் வறுமை ஒழிப்புத்திட்டத்திற்கான ஜனசக்தி முத்திரைகள் ஏற்றுக் கொள்ளப்படாதிருந்ததும், இன்னொரு பகுதி முத்திரைகளுக்கு உலர் உணவு வழங்குவதும் நிறுத்தப்பட்டிருப்ப (4 ஆம் பக்கம் பார்க்க)

## நிபுணர் கைது!

(கொழும்பு)

சிறிலங்காவின் தென் பகுதியில் உள்ள அம்பிலியப்பிட்டியாவில் திலக்கண்ணி வெடி தயாரிப்பதில் தேர்ச்சி பெற்ற நபர் ஒருவரை பொலிசார் கைது செய்துள்ளனர்.

கடந்த காலங்களில் சிறிலங்காவின் தென்பகுதியில் இடம்பெற்ற வன்முறை செயல்களுக்கும் இவருக்கும் தொடர்பு இருப்பதாக தாம் சந்தேகிப்பதாகவும் அவர்கள் தெரிவித்தார்கள்,

## நோய், ஊட்டச்சத்தின்மை; 40,000 குழந்தைகள் மடிவு

(வாஷிங்டன்)

ஊட்டச்சத்தின்மையும். நோய்களினாலும் உலகில் நாளாந்தம் 40,000 குழந்தைகள் மரணமடைகின்றனர் என குழந்தைகளுக்கான உலகப்பிரகடனம் தெரிவித்துள்ளது.

நியூயோர்க்கில்செப்டெம்பர் மாதம் இடம்பெற்ற குழந்தைகள் பற்றிய பிரகடனத்தில் இந்த விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன:

மற்றும் உலகில் 10 கோடி மக்கள் ஆதாரக்கல்வி வசதியின்றி உள்ளவர்கள் என்றும் இவர்களில் மூன்றில் இரண்டு பகுதியினர்பெண்குழந்தைகள் என்றும் அந்தப் பிரகடனத்தில் கூறப்பட்டுள்ளது.

## ஆயுர்வேத வைத்தியர்களும் அதிகாரிகளாக நியமனம்

(கொழும்பு)

ஆயுர்வேத வைத்தியர்களும் இனிமேல் சுகாதார வைத்திய அதிகாரிகளாக நியமிக்கப்படுவார்கள் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

எம். ஓ. எச். என அழைக்கப்படும் இந்தத் தகுதிக்கு இதுவரை மேற்கத்தேய மருத்துவத்துறையில்பட்டம்பெற்றவர்களே நியமிக்கப்பட்டார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## தென்னாபிரிக்காவில் விபத்து; யாழ் வாசி மரணம்

(யாழ்ப்பாணம்)

வண்ணார் பண்ணை லெப். கேணல் ராதா வீதியைச் சேர்ந்த பொறியியலாளரான பிரேமச்சந்திரனின் குடும்பத்தினர் பிரயாணம் செய்துகொண்டிருந்த கார் தென்னாபிரிக்கா வீதி ஒன்றில் விபத்தில் சிக்கியது. இந்த விபத்தில் பொறியியலாளரின் மாமனாரான ஆ.ஜெயராசசிங்கம் ஸ்தலத்திலேயே மரணமானார். வாகனத்தில் பிரயாணம் செய்த மற்றவர்கள் சிறுகாயங்களுக்கு உள்ளாகினர்.

(44)

## வரிவிளம்பரம்

**விற்பனைக்கு**

நத்தார் புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம் (வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) "மண்டேலா ரேடர்" இல. 256A பருத்தித்துறை வீதி, நல்லூர். "அரஸ்ஜவுளியகம்" 146 நவீன சந்தை, யாழ்ப்பாணம். (R/888)

**அன்ரன் ஆர்ட்ஸ்**
**ANTAN ARTS**

தொழில் ஸ்தாபனங்களுக்கான விளம்பரப் பெயர்ப்பலகைகள் குறித்த தவணையில், சிறந்த முறையில் எழுதிப் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு கொள்க. அன்ரன் ஆர்ட்ஸ், C/O டில்கா வாச் வேக்ஸ், டில்கா மேல் மாடி, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம். (B/1684)

**தவறிவிட்டது**

இல 60, கடை வீதி, வவுனியாவைச் சேர்ந்த சின்னத்தம்பி நாகேஸ்வரன் என்பவருடைய அடையாள அட்டையும், 9 படம் எடுத்தபடியுள்ள படச் சுருள்(திருமணம்), காசோலை என்பன சங்குப்பிட்டிக்கும் பூநகரிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 107, பலாலி றோட், கந்தர் மடம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (R 918)

685040212V இலக்கமுடைய அடையாள அட்டையும் சிறிய கைப்பையும் 10. 12. 90 அன்று கல்வியங்காடு சந்தையில் தொலைந்து விட்டன. இவற்றைக் கண்டெடுப்பவர்கள், அடையாள அட்டையை ஈழநாதம் காரியாலயத்தில் சமர்ப்பிக்குமாறும், இல்லையேல் A. மதிச்செல்வி, அச்செழு வடக்கு, நீர்வேலி என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்குமாறும் தயவாக வேண்டிக்கொள்கின்றேன். (R-923)

**நாடக நூல்கள்**

ஆயிரமாயிரம் கவிதைகள், சிறுகதைகள், நாவல்களுக்கு மத்தியில் விற்பனையாகும் இரண்டே இரண்டு நாடக நூல்கள்: அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை எழுதிய 'கெட்டிக்காரர்கள்' 25/- முதலாம் பிள்ளை 30/- நகைச் சுவை நிறைந்த 19 வானொலி நாடகங்கள் - பூபாலசிங்கம் புத்தகசாலை. (R-921)

---

## வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை,
## நீர்வேலி.
## கேள்வி அறிவித்தல் 1991.

10-11-1990 ஆம் திகதி சனிக்கிழமை 'ஈழநாதம்' பத்திரிகையில் பிரசுரமான வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் சந்தைகள், இறைச்சிக் கடைகள், கடைகளை 1991 ஆம் ஆண்டிற்கு குத்தகைக்குக் கொடுப்பதற்கான கேள்வி அறிவித்தல் தொடர்பாக கேள்விப் பத்திரங்கள் வழங்கும் திகதி 18-12-1990 ஆம் திகதி நண்பகல் 12 00 மணி வரைக்கும், கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும் திகதி 21-12-1990 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரைக்கும் என நீடிக்கப்பட்டுள்ளது:

திருமதி தனேஸ்வரி பாஸ்கரன்..
விசேட ஆணையாளர்,
வலி. கிழக்குப் பிரதேச சபை,
நீர்வேலி.

வலி. கிழக்குப் பிரதேச சபை,
தலைமை அலுவலகம், நீர்வேலி.
10-12-90

(B/ 1706)

---

## LONDON EXAMS
### May - June 91

| | | |
|---|---|---|
| C. I. M. A. | - | Stage I |
| A. A. T. | - | Stage I |
| I. A. B. | - | Foundation Inter Final |

ஆரம்பம்: 15-12-1990

### School of Business Administration

16, 3ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

(B. 1703)

---

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

### A/L 91, 92.
### விஞ்ஞானம்

புதிய பிரிவு ஆரம்பம்: 15-12-1990 (சனி) 1 மணி

★ தூய, ★ பிரயோக ) கணிதம் — கிருஷ்ணா
★ பௌதிகவியல் — N. பத்மநாதன்
★ இரசாயனவியல் — இராமநாதன்
★ தாவரவியல் — ஸ்ரீகரன்
★ விலங்கியல் — பிரபல ஆசிரியர்

விண்ணப்பங்களை முன்கூட்டியே பதிவுசெய்து கொள்ளவும். (B. 1709)

---

## கம்பியூட்டர் கல்வி

★ DIPLOMA IN DATA PROCESSING AND COMPUTER PROGRAMMING IN BASIC LANGUAGE

ஆரம்பம்:- 16 Dec. 1990.
(சனி, ஞாயிறு வகுப்புக்கள்)
19 Dec. 1990.
(திங்கள், புதன், வெள்ளி வகுப்புக்கள்)

O/L படித்த இரு பாலாரும் சேரலாம். மிகவும் விளக்கமான முறையில் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும். (B-1711)

### Unikco Computer Centre

No. 37, Clock Tower Road,
JAFFNA.
(வெலிங்டன் சந்திக்கு அருகாமையில்)



---

## மூன்றாம் மாத நினைவஞ்சலி



| தாயகத்தில் | தியாகத்தில் |
|---|---|
| 22 | 15 |
| - | - |
| 11 | 09 |
| - | - |
| 1966 | 1990 |

### கப்டன் ஹீரோராஜ்
### (சண்முகசுந்தரம் பிரபாகரன்)

அச்செழு, நீர்வேலி.

*மண்ணுக்காக மரணிப்பவர்கள்*
*மக்கள் மனங்களில் மலர்கிறார்கள்!*

15-12-1990 சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் எமது ஏகபுத்திரனின் வீட்டுக்கிருத்தியங்களிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

—குடும்பத்தினர்.

அச்செழு,
நீர்வேலி.

(R-924)

---

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தமிழீழ மண்ணில் | தமிழீழ வானில் |
|---|---|
| 30 | 13 |
| - | - |
| 04 | 12 |
| - | - |
| 69 | 88 |

### லெப்ரினன்ட் வேல்ராஜ்

கல்வியா, செல்வமா, வீரமா?

*கல்வியுடன் செல்வமும் பெற்றதுடன் நில்லாது*
*காப்பது தமிழீழம் கடமையெனப் போராடி,*
*சிரித்த முகத்துடனே சீறுகின்ற வேங்கையனாய்,*
*சீரிய புலிப்படையில் சேர்ந்து நின்று போராடி*
*மார்பினிலே குண்டேந்தி மறத்தமிழனாகியதை,*
*மறக்காமல் நாம் இன்று மலர் சொரிந்து*
*அன்பான அஞ்சலிகள் அழகான நூல் நிலையம்*
*அர்ப்பணித்தோம், தொடர்கின்றோம் உன் புனித பாதை.*

அளிப்பளை, கண்டாவளை.
அப்பா, அம்மா, தம்பி, அக்கா, அத்தான், அண்ணாமார், அண்ணி, மாமாமார், அத்தைமார்.

(R/922)

---

1991 ஆம் ஆண்டுக்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

## வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை,
## நீர்வேலி.

1991 ஆம் ஆண்டுக்கு கீழ்க்காணும் பொருள்களை வழங்குவதற்கான வழங்குநர்களைப் பதிவு செய்யும் விண்ணப்பங்கள் வியாபார ஸ்தாபனங்கள், உற்பத்தியாளர்களிடமிருந்து வழங்கு பொருள்களுக்கு நேரே குறிப்பிடப்பட்டுள்ள பதிவுக் கட்டணங்களைச் செலுத்துவதன் பேரில் 27 12.1990 ஆம் திகதி நண்பகல் 12 00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். ஒவ்வொன்றிற்குமான விண்ணப்பங்கள் தனித் தனியே அவற்றின் பதிவுக் கட்டணத்துடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விண்ணப்பங்களைத் தபாலில் அனுப்ப விரும்புவோர் பதிவுக் கட்டணங்களை 'விசேட ஆணையாளர், வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை' யின் பெயருக்கு காசோலையாகவோ அல்லது காசுக்கட்டளையாகவோ மேற்குறிப்பிடப்பட்ட திகதிக்கு முன்னர் அனுப்பிவைத்தல் வேண்டும்.

| பொருள்கள் / சேவைகள் | பதிவுக் கட்டணம் |
|---|---|
| 1. காகிதாதிகள்/அச்சிட்ட படிவங்கள்/பதிவேடுகள். | 100.00 |
| 2. சுகாதார சேவைக்கான பொருள்கள் வழங்கல். | 50.00 |
| 3. மின்சாரப் பொருள்கள்/உபகரணங்கள்/கருவிகள் வழங்கல். | 100.00 |
| 4. சீருடைத் துணிகள் சப்பாத்துகள் வழங்கல். | 50.00 |
| 5. வண்டி வாகனத் தகடுகள் தயாரித்து வழங்குதல். | 50.00 |
| 6 வலுவூட்டப்பட்ட மின்கம்பங்கள். | 100.00 |
| 7 தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் விநியோகம். | 50.00 |
| 8. சித்த ஆயுர்வேத மருந்துகள் வழங்கல். (அங்கீகாரம் உடையவர்கள் மட்டும்) | 100.00 |
| 9. வீடுகளுக்கான உள்ளக மின் இணைப்புச் செய்தல். | 25.00 |
| 10. புத்தகங்கள் கட்டுதல். | |

திருமதி. தனேஸ்வரி பாஸ்கரன்,
விசேட ஆணையாளர்,
வலி. கிழக்குப் பிரதேச சபை,
நீர்வேலி.

வலி. கிழக்குப் பிரதேச சபை,
தலைமை அலுவலகம், நீர்வேலி.
1990.12.10

(B/1707)

## சிந்தனைக்கு

எவரும் கோபம் கொள்ளலாம்; எளிதானது அது. ஆனால் சரியான ஆளுடன், சரியான அளவுக்கு சரியான நேரத்தில், சரியான காரணத்திற்காக சரியான வழியில் கோபம் கொள்ளுவது, எல்லோராலும் இயன்றதல்ல, அது எளிதானதுமல்ல.

— அரிஸ்டாட்டில்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 14-12-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2288
த.பெ.எண் 85

# சீனப் பிரதமரின் சிறிலங்கா விஜயம்

சீனப் பிரதமர் லிபெங் தனது தென்கிழக்கு ஆசிய, தென்ஆசிய விஜயத்தின் ஒரு பகுதியாக எதிர்வரும் பதினேழாம் திகதி சிறிலங்காவிற்கு விஜயம் மேற்கொள்ள உள்ளார்.

சீனப் பிரதமரின் இந்த விஜயம் நட்புரீதியானதெனக் கூறப்படுகின்ற போதிலும், சீனாவைப் பொறுத்தும் அவர் விஜயம் செய்யும் நாடுகளைப் பொறுத்தும் முதன்மையானதாகும். இதற்கு முதல் சீனப் பிரதமர் தென்கிழக்கு ஆசியாவிற்கு மேற்கொண்ட விஜயத்தினால் சீனாவிற்குக் கிடைக்கப்பெற்ற வெற்றியின் தொடராகவே இந்த விஜயம் நடைபெறுகின்றது.

கடந்த ஆண்டு சீனாவில் ஏற்பட்ட தியனன்மென் சதுக்க படுகொலைகளின் பின் சீனாவிற்கு வெளியுலகில் ஏற்பட்ட அவமானங்களைப் போக்குவதற்கும் தனது பொருளாதார நலனுக்குமாக சீனா இந்த விஜயங்களைப் பயன்படுத்திக் கொண்டது. ஆனால் சீனப் பிரதமரின் விஜயமானது சீனாவைப் பொறுத்து முக்கியம் பெறுவதை விட சிறிலங்காவைப் பொறுத்தே மிகவும் முக்கியம் பெறுகின்றது. அத்தோடு தென்ஆசிய அரசியலிலும் முதன்மை பெறுகின்றது.

இந்த நூற்றாண்டில், சீன - இலங்கை உறவைப் பற்றி நாம் அறிந்தவகையில், முதலில் தெரிந்ததாக இருந்தது அரிசி - இறப்பர் ஒப்பந்தமே. ஆனால் சிறிலங்காவிற்கும் சீனாவிற்கும் இடையில் பௌத்தம் தொடர்பாக வரலாற்று ரீதியான உறவும் இருந்து வந்துள்ளது என தெரிவிக்கப்பட்டு வந்துள்ள போதும் அது அரசியலில் பெரும் இடத்தைப் பிடிக்கவில்லை. அதிலும் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் இருக்கவில்லை.

ஆனால், சிறிலங்காவில், சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியில் இருந்தபோது சீனாவிற்கும் சிறிலங்காவிற்கும் நெருக்கமான உறவு நிலவி வந்தது. இதன் வெளிப்பாடாக அமைந்ததே பண்டாரநாயக்கா ஞாபகார்த்தமண்டபமாகும்.

இந்த நிலையில், இலங்கையில் தமிழர் தேசிய பிரச்சினை முனைப்படைந்தமையும், சர்வதேச ரீதியில் ஏற்பட்டஅரசியல்மாற்றங்களும் சிறிலங்காவின்வெளியுறவுக் கொள்கையில் ஐக்கிய தேசியக் கட்சி பெரியளவிலானதான மாற்றத்தை ஏற்படுத்தியது. இதற்கு பிரதானமான காரணமாக இருந்தது மூன்றாம் உலக நாடுகளின் பிரதான ஆயுத விநியோகஸ்தர்களில் சீனாவும் ஒன்றாக இருந்தமையேயாகும்.

இதனை வெளிப்படுத்துவது போல், சீனா சிறிலங்காவிற்கு கப்பற்படை,விமானப்படை தளபாடங்களை விநியோகித்திருந்த அதேவேளை, இராணுவத்தினருக்கு சுடுகலன்களையும் விநியோகித்தது. இவ்வாறு சீனா சிறிலங்கா உறவு நெருக்கமடைந்த நிலையில், சீனப் பிரதமர் லிபெங்கின் சிறிலங்கா விஜயம் சிறிலங்காவின் அரசியலில் மட்டுமல்ல, தென் ஆசியாவின் அரசியல் ரீதியிலும், ஏன் இராணுவ ரீதியிலுமே மிகவும் முக்கியம் வாய்ந்ததாகும்.

அதாவது தென் ஆசியாவில் வளர்ந்து வரும் பாகிஸ்தான் சிறிலங்கா இராணுவ ஒத்துழைப்பு, சிறிலங்கா சீனா ஒத்துழைப்பு, பாகிஸ்தான் சீனா ஒத்துழைப்பு ஆகிய முக்கூட்டு ஒத்துழைப்பு இராணுவ சமநிலையில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

அதேவேளை, வெளியுறவுக் கொள்கையில் ஒரு ஸ்திரமான கொள்கையில்லாது இந்தியா தடுமாறிக் கொண்டிருக்கின்றது. இந்த நிலையில் இந்திய வெளியுறவு அமைச்சர் வி சி சுக்லா இலங்கையின் இனப பிரச்சினையில் வெளியார் தலையீட்டை தாம் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை எனத் தெரிவிக்கின்றார். அவரின் இந்தக் கூற்றை நோக்கும் போது வெளியார் தலையீடு என்று கூறுவது இராணுவத் தலையீட்டை மட்டுமே என்று எண்ணத் தோன்றுகின்றது. இராணுவத் தலையீடு அல்லாத வேறு தலையீடுகளுமே பாதகமானது என்பது இந்தியாவிற்கு விளங்கவில்லைப் போலும்.

ஆகையினால், வெளியார் தலையீடு என்பதை பரந்துபட்ட ரீதியில் இந்தியா புரிந்து கொண்டு நேச சக்தியான தமிழீழ மக்களுக்கு இந்தியா உதவ முன் வரவேண்டும். அதை விடுத்து இந்தியா வேறுபட்ட அணுகுமுறையைக் கடைப்பிடிக்குமேயானால் அதற்கு கொடுக்க வேண்டியிருக்கும் விலை அதிகமாக இருக்கும். இது தொடர்பான வேறு விடயங்களையும் இதே பகுதியில் முன்னரும் சுட்டிக் காட்டியுள்ளோம்.

# மாவீரர் வாரம்

## ஒரு கண்ணோட்டம்

(நேற்றைய தொடர்ச்சி)

இனியவன்

நள்ளிரவு ''நேரம்; 12.01க்கு ஆலயமணிகள் அனைத்தும் ஒலிக்கப்படும். அதனையடுத்து மாவீரர்களின் நினைவாக இரண்டு நிமிட நேரம் மௌன அஞ்சலி செலுத்தப்படும். தொடர்ந்து 12.03க்கு மாவீரர் சுடர் ஏற்றப்படும். '' என்றவாறாகச் செய்திகள் தெரிவித்த போது நள்ளிரவு நேரத்தில் - போக்குவரத்து வசதிகள் அறவே இல்லாத இந்த வேளையில் எப்படித்தான் இது நடைபெறும் எனப்பலர் எண்ணினர் என்பது உண்மைதான்.

ஆனால் நள்ளிரவு நேரம் வரை கண்விழித்துக் காத்திருந்து மணியோசை கேட்டதும் துள்ளி எழுந்து வந்து மௌன அஞ்சலி செலுத்திய பின் ஏற்றப்பட்ட மாவீரர் நினைவுச்சுடர்கள் ஏறத்தாழ ஒவ்வொரு வீட்டு வாசலிலும் காணப்பட்டன. கொட்டும் மழையினையும் பொருட்படுத்தாமல் வீதிகளின் இருமருங்கும் சுடரொளியின் ஒளி வீசிப் பிரகாசித்தது. சிந்துகின்ற மழைத்துளிகளிலிருந்து சுடர்களைக் காக்க ஆங்காங்கே குடைகளைத் தாங்கிய வண்ணம் மக்கள் ஆர்வத்துடன் நின்றிருந்தனர். சிறுவர்கள், முதியோர், பெண்கள் உட்படப் பலரும் வீதிகளில் குவிந்து உற்சாகம் மேலிட மாவீரர் நாள் நிகழ்ச்சிகளில் பங்கேற்றமையினை அவதானிக்க முடிந்தது.

எந்தக் கோட்டை எங்கள் வசமாக வேண்டும் என்று லெப். கேணல் திலீபன் விரும்பினானோ அந்தக் கோட்டையில் இருபதடி உயரக் கம்பத்தில் மாவீரர் சுடர் யாழ். மாவட்டத்தளபதியான பானு அவர்களால்ஏற்றி வைக்கப்பட்டது. இதுகால வரையில்மண் மீட்கும் போராட்ட வேள்வியில் தம் இன்னுயிரை ஆகுதியாக்கிய இரண்டாயிரத்துமுந்நூற்றைம்பது வேங்கைகளையும் நினைவு படுத்தும் முகமாக அதே எண்ணிக்கையான சுட்டிகளில் மாவீரர் சுடர் ஏற்றப்பட்டது. கோட்டை மதிற்சுவர் முழுவதிலும் ஏற்றப்பட்டிருந்த இந்தச் சுடர்களால் கோட்டைப் பகுதி ஒளி வெள்ளத்தில் மிதந்தது. இந்த நிகழ்ச்சியில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் யோகி, புலிகளின் மூத்த உறுப்பினர் பொட்டு, கலை கலாசாரப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை ஆகியோர் கலந்து கொண்டனர்.

370 ஆண்டுகளுக்கு மேலாக எமது மண்ணை ஆக்கிரமித்திருந்தவர்களின் சொத்தாக இருந்த கோட்டையில் பட்டொளிவீசிப் புலிக்கொடி பறக்கும் காட்சியைக் காண நள்ளிரவிலும் கூட கூட்டம் கூட்டமாக மக்கள் விரைந்து சென்றனர்.

வன்னிப் பிராந்தியத்தில் இடம்பெற்ற மாவீரர்வார நிகழ்ச்சிகளில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் கோ.மகேந்திரராசா கலந்துகொண்டார். இருபத்தாறாம் திகதி அதிகாலை மணலாறு மாவட்டத்தில் மாவீரர்களின் பெற்றோரைச் சந்தித்த திரு. மகேந்திரராசா அவர்கள் ஒட்டுசுட்டான், உருத்திரபுரம் ஆகிய இடங்களில் மாவீரரின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டார். மன்னார் மாவட்டம் முழங்காவிலில்இருபத்தேழாம் திகதி அதிகாலை மாவீரர் சுடரை ஏற்றிவைத்த திரு. மகேந்திரராசா பூநகரி - மன்னார் வீதியில் மாவீரர் கலை அரங்கத்தையும் திறந்து வைத்தார்.

மாவீரர் வாரத்தின் முக்கிய நிகழ்ச்சிகளில் ஒன்றாக மாவீரர்களின் பெற்றோர்களை - உடன்பிறப்பினரைக் கௌரவிக்கும் வைபவங்கள் இடம்பெற்றன. நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் இருந்தும் வெவ்வேறு குடும்ப சமூகச் சூழ்நிலைகளில் இருந்தும் - இலட்சியத்தினால் ஈர்க்கப்பட்டு இயக்கமாக இணைந்து நின்றவர்கள் மாவீரர்களாயினர். களத்தில் போராடி காயம்பட்டும், பிற வகையிலும் தம் இன்னுயிரை ஈர்ந்துவிட்ட போராளிகளின் பெற்றோர்கள் இணைந்து கொண்ட நிகழ்ச்சியாக இது அமைந்தது. இதற்கு முன் பாகப் போராளிகள் மட்டத்தில் காயம்பட்ட நிலையில் அல்லது நோய்வாய்ப்பட்ட நிலையில், குடும்பங்களின் பராமரிப்பில் தங்கிப் பழக்கப்பட்டிருந்தாலும்கூட அவர்களுக்கிடையில் ஒரு நெருக்கத்தை ஏற்படுத்தும் சந்திப்பாக இது மலர்ந்தது.

இந்திய இராணுவத்தால் சிறைவைக்கப்பட்ட போராளிகளை சந்திக்கச் சென்ற சந்தர்ப்பத்தில் அறிமுகமாகிக் கொண்ட பலர் மாவீரர்களின் பெற்றோர்களாக ஐக்கியமாகிக்கொண்டனர்.

ஆரவாரமற்ற முறையில் மாவீரர்களின் பெற்றோர்களாகச் சந்தித்த வேளையில் சமூகத்தின் சாதாரண சின்னத்தனங்களையும், எல்லைக்கோடுகளையும் அவர்களால் மிகச் சுலபமாகத் தாண்டிவிட முடிந்தது. இதுவரைகாலப் போராட்டத்தின் ஒரு பக்க விளைவாய் ஆயிரமாயிரம் பேர்கள் இலட்சியத்தால் இணைக்கப்பட்டு ஒன்றுபட்ட மனத்தினராய் - ஒத்தகருத்தினராய் செயற்பட்ட பாங்கு ''எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்; இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே'' என்ற பாரதிதாசனின் வரிகள் நினைவில் தோன்றியது. உள்ளத்தால் ஒருவராய் உருவத்தில் பலராய் தோன்றும் இயக்கம்போல இந்தப் பெற்றோர்களின் சங்கமம் விளங்கியது.

பல முக்கியமான இடங்களிலும் பொதுக்கூட்டங்கள் இடம்பெற்றன. இந்தப் பொதுக்கூட்டங்களுக்கு ஆர்வமுடன் திரண்ட மக்கள் கூட்டம் 'விடியலுக்கில்லை இனி வெகுதூரம்' என்பதை முரசறைந்து சொல்வது போலிருந்தது. (முற்றும்)

# தியாகம், வீரம் பிரதிபலித்த மாணவர் கலை நிகழ்ச்சிகள்

(நமது நிருபர்)

மாவீரர் தினத்தையொட்டி விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கத்தினரால் நடத்தப்பட்ட கலை நிகழ்ச்சிகளில் மாவீரர்களின் வீரம், தியாகம் என்பனவற்றை பிரதிபலிக்கும் கருத்துக்கள் பெருமளவில் காணப்பட்டன.

மக்கள் அவர்களை என்றும் மறக்காது இணைய வேண்டிய தேவை போன்றவற்றை வலியுறுத்துவனவாக அவை இருந்தன.

மேலும் இவர்களது ஆக்கங்கள் கலை நிகழ்ச்சிகளில் பல தடவைகள்மேடையேற்றப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும்.

நாடகங்களில் ஈழந்துப் பரணி 6 தடவைகளும், போராட்டம் ஏன்? விழித்தெழுந்து விட்டார் 3 மேடைகளிலும், புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் 6 தடவைகளும் 'விழித்தெழுந்தமுத்திரை 9 தடவைகளும் நாளை மலரும் தமிழீழம் 7 தடவைகளும் மேடையேற்றப்பட்டன.

இதனை விட ''விரசுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர் வேறொன்று கொள்வாரோ'' என்ற பாரதியின் வாக்கு தமிழீழத்தில் பவித்ததா என்ற பட்டிமன்றம் ஐந்து மேடைகளிலும் 'மாண்காத்த மாவீரர்' என்ற வில்லிசை 12 மேடைகளிலும், 'மறக்க முடியா புரட்சி' என்ற வில்லிசை 2 மேடைகளிலும் நடைபெற்றன.

இவை அனைத்திலும் மாணவரின் கல்வி நிலை தொடர்பான 'மாற்றம்' என்ற நாடகம் 20 இடங்களில் மேடை ஏற்றப்பட்டதோடு மக்களின் உள்ளத்தில் உணர்வுகளை ஊட்டியதோடு மனங்களில் புதிய சிந்தனைகளையும் தூண்டியது.

மாநகர சபையின்

# வரவு - செலவுத் திட்டம் பொது மக்களின் பார்வைக்கு

(யாழ்ப்பாணம்)

1991 ஆம் ஆண்டிற்கான மாநகரசபையின் வரவு செலவுத்திட்டம் பற்றிய விபரங்கள் இன்று 14ஆம் திகதி முதல் ஏழு நாட்களுக்கு மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்படும் என ஆணையாளர் திரு வி. பி பாலசிங்கம்அறிவித்துள்ளார்.

1991ஆம் ஆண்டிற்கு கிடைக்கக் கூடிய மாநகர வருமான மதிப்பீட்டையும் உத்தேச செலவின விபரங்களையும் உள்ளடக்கிய வரவு செலவுத்திட்டம் மாநகராட்சி மன்றங்கள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 252) (212) (பி) பிரிவின் பிரகாரம் பார்வைக்கு வைக்கப்படும் என தெரிவித்துள்ளார்.

## ஆலோசனைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகத்தில் இன்று 14 ஆம் திகதி கூட்டுறவு உதவி ஆணையாளர் ஏனைய அரச அதிகாரிகள் பங்குபற்றும் ஆலோசனைக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இதேதினம் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றிய அதிகாரிகள் அரசாங்க அதிபரைச் சந்தித்து அகதி முகாம்களுக்கான நிவாரண வேலைகள் பற்றி ஆலோசனை நடத்துவார்கள்.

## நாளை காலை மலரும்!

செல்பவர் வருவார் என்று
சொல்லவே முடிவதில்லை
'செல்'களே இதைசொல்வதால்
சாஸ்திரம் இப்போதில்லை
பொம்மரும் கெலியும் இன்று
ஆட்சி நடத்துது
பொங்கிடும் இளைஞர் நாளை
பாடங்கள் சொன்னதும்
நம்புங்கள்நாளைகாலை மலரும்
நாட்டில் புலிக்கொடி
எங்கணும் உயர்ந்து பறக்கும்!

-வைப்பு

சோவியத் யூனியனுக்கு அமெரிக்கா

# 100 கோடி டொலர் உணவு உதவி;

# ஜோர்ஜ்புஷ் அறிவிப்பு

(வாஷிங்டன்)

சோவியத் யூனியனுக்கு 100 கோடிஅமெரிக்க டொலர்கள் பெறுமதியான உணவு உதவிகளை கடனாக வழங்கப்போவதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் அறிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வாஷிங்டனில் சோவியத் வெளியுறவுத்துறை அமைச்சர் செவர்னாட்சே ஜனாதிபதி புஷ்யை சந்தித்து அங்குநிலவும்உணவுப் பஞ்சம் குறித்து பேசியதன் பின்னர் அவர் இதனை அறிவித்துள்ளார் என்று கூறப்படுகிறது.

1972 ஆம் ஆண்டிற்குப் பின்னர் இருநாடுகளுக்கும் இடையில் வர்த்தக உறவு தடை செய்யப்பட்டிருந்தது; சோவியத் யூனியனில் யூதர்களை கட்டுப்பாடின்றி குடியமர்த்த சோவியத் பாராளுமன்றம் சட்டமியற்றும்வரை அமெரிக்கா எந்தவிதவர்த்தக நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாது என அறிவித்தது அத்துடன் சட்டம் ஒன்றும் இயற்றப்பட்டது.

இந்தச் சட்டத்தை ரத்துச் செய்து சோவியத் யூனியனுடன் வர்த்தக உறவை வைத்துக்கொள்ள தாம் முன்வந்திருப்பதாகவும் ஜோர்ஜ்புஷ் அறிவித்துள்ளார்.

இதேவேளை இன்று ரோமில் நடைபெறவிருக்கும் ஐரோப்பிய பொருளாதார சமூக உச்சி மாநாட்டில் 100 கோடி டொலர் பெறுமதியான உணவுப் பொருள்களும், 50 கோடி டொலர் தொழில் நுட்ப உதவியும் சோவியத் யூனியனுக்கு வழங்க உறுப்பு நாடுகள் முடிவு செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கு முன்னேற்பாடாக பிரான்ஸில் நடைபெற்ற ஐரோப்பிய பொருளாதார சமூக நிதி அமைச்சர்கள் மாநாட்டில் உதவி வழங்குவதென்று முடிவு எடுக்கப்பட்டது.

## யாழ். பல்கலைக்கழகத்தில் தளபாட மோசடி விசாரணை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக தளபாட மோசடி சம்பந்தமான விசாரணைகள் நடைபெற்று வருகிறது அதிகாரி ஒருவர் யாழ். பல்கலைக்கழக அலுவலகத்திலிருந்து சில தளபாடங்களை கையாடிவிட்டமை சம்பந்தமாக இந்த விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

இந்த மோசடிபற்றி மேலும் தெரியவருவதாவது; இந்த மாதம் 4ஆம் திகதி பல்கலைக்கழகத்தின் கட்டடத்தினுள் வைக்கப்பட்டிருந்த சில தளபாடங்களை அகற்றி இன்னும் ஓர் இடத்தில் வைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டதற்கு இணங்க லொறி ஒன்றை வாடகைக்கு அமர்த்தி தளபாடங்கள் ஏற்றப்பட்டசமயம் சந்தேகத்திற்குரிய அந்த அதிகாரி ஏற்றவேண்டிய தளபாடங்களுடன் இந்த கட்டடத்திலிருந்த மேலும் சில தளபாடங்களையும் ஏற்றி சென்றுவிட்டதாக தகவல்கள் கூறுகின்றன. (லோ)

கலவரங்களை அடுத்து

## ஆந்திர முதல்வர் ரெட்டி பதவி விலக தீர்மானம்

(ஹைதராபாத்)

ஆந்திர மாநில முதல்வர் சென்னாரெட்டி பதவி விலக முன்வந்துள்ளார். ஆந்திர மாநிலத்தில் மிக மோசமாக இடம்பெற்ற இந்து-முஸலிம் கலவரங்களை தொடர்ந்தே அவர் பதவி விலக முன்வந்ததாக அறிவித்துள்ளார்.

அயோத்தியில் இன்னமும் முறுகல் நிலை தணியாமல் இருக்கும்போது ஆந்திரப் பிரதேசத்தில் மேலும் வன்முறை மோதல்கள் தொடர்ந்து வருகின்றது இதனைத் தொடர்ந்து இந்திரா காங்கிரஸ் கட்சியின் ஆட்சியிலுள்ள ஆந்திரப் பிரதேசத்தில் முதல்வர் சென்னாரெட்டி பதவி விலக முன்வந்திருக்கிறார்.

## துயர்துடைப்பிற்கு ஒருநாள் சம்பளம்

(யாழ்ப்பாணம்)

தென் தமிழீழ மக்களின் துயர் துடைப்பு நிவாரண நிதிக்கு 'ஈழநாதம்' பத்திரிகை ஊழியர்கள் அனைவரும் தமது ஒருநாள் சம்பளத்தை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்கள் (மு)

வடமராட்சி கிழக்கில்

## ஆஸ்பத்திரியில் மருந்து இல்லை மக்கள் பெரும் அவதி

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் உள்ள மருதங்கேணி, அம்பன், முள்ளியான் ஆகிய இடங்களில் உள்ள வைத்தியசாலைகளில் முக்கிய மருந்துகள், வைத்திய வசதிகள் என்பன இல்லாமையால் பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இப்பகுதியில் அவசரநோயாளிகளை எடுத்துச் செல்வதற்கு ஒரு அம்புலன்ஸ் வண்டி கூட இல்லாதிருப்பதனால் அவசர சிகிச்சைக்காக நோயாளிகளை எடுத்துச் செல்வதில் மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

இதனால் வீண் உயிரிழப்புக்கள் அடிக்கடி இங்கு ஏற்படுகின்றன. அண்மையில் பாம்புக்கடியால் பாதிக்கப்பட்ட இளைஞனொருவரை மாட்டு வண்டியில் கொண்டுவரும் போது வரும் வழியில் அவர் மரணமடைந்துள்ளார். (மு

## தென்தமிழீழ மக்கள் ஒளிப்பதிவு நாடா

(நமது நிருபர்)

'தென்தமிழீழ மக்கள்' என்னும் ஒளிப்பதிவு நாடா கிராமம், கிராமமாக மக்களுக்குக் காண்பிக்கப்பட்டு வருகிறது. அம்பாறை, மட்டக்களப்பு. திருக்கோணமலை ஆகிய மாவட்டங்களிலுள்ள தமிழ் மக்கள் சிங்கள இராணுவத்தினராலும், சிங்கள, முஸ்லிம் ஊர்காவற் படையினராலும் இம்சிக்கப்படுவதையும், அந்த மக்களின் துயரங்களை வெளிப்படுத்துவதாகவும் இந்த விபரணப்படம் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

இதில் திருமலை மாவட்டத் தளபதி பதுமன், மட்டக்களப்பு மாவட்டத் தளபதி கருணா ஆகியோரின் பேட்டிகளும், தென்தமிழீழ மக்களுக்கு உதவுதல் தொடர்பாக பிரதித் தலைவர் வெளியிட்ட செய்தியும் அடங்கியுள்ளது. இது ஒரு நிதர்சனம் தயாரிப்பாகும். (மு)

## சுதந்திரவீரர் சுட்டுக் கொலை

(ஸ்ரீநகர்)

இந்தியாவின் சுதந்திரப் போராட்ட வீரரும், இந்திய லோக் சபாவின் முன்னாள் உறுப்பினரும், காஷ்மீர் மாநிலத்தின் பிரபல அரசியல் வாதியுமான மௌலானா சையத் மசூதி அவரது வாசஸ்தலத்தில் வைத்து ஆயுதம் தாங்கிய இனந்தெரியாத நபர்களால் நேற்று சுட்டுக்கொல்லப்பட்டார்.

## நேற்று 300 பேர் யாழ். வந்தனர்

(நல்லூர்)

கொழும்பிலிருந்து நேற்று முன்தினம் இரவு 300க்கும் அதிகமானவர்கள் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்கள். இவர்கள் கொழும்பிலிருந்து மதவாச்சி வரை புகையிரதத்தில் வந்து, பின் லொறிகளில் பிரயாணத்தைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் வந்தடைந்தார்கள். பிரயாணிகள் வழியில் இராணுவத்தினரின் கெடுபிடிக்கும், கடும் சோதனைக்கும் உள்ளாக்கப்பட்டார்கள்.

## அனுமதி வழங்கும் அதிகாரம் பிரதேச திணைக்களத்திடம்

வெளிநாடு செல்லும் மாணவர்களுக்கு

(கொழும்பு)

கல்வி நடவடிக்கைகளுக்காக வெளிநாடுசெல்லும் மாணவர்களுக்கு அனுமதி வழங்கும் அதிகாரம் இனிமேல் பிரதேச கல்வித் திணைக்களத்திற்கே வழங்கப்படும் என கல்வி அமைச்சு முடிவு எடுத்துள்ளது

இதுகுறித்து கல்வி அமைச்சுக்குத் தரப்பட்ட புகார்களை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அந்த அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

பிரதேச ரீதியாக எடுக்கப்படும் தரவுகள் சரியாக இருக்கும் என்பதால் இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும் கூறினார்.

## யாழ். மாவட்ட கல்விப் பிரிவின் கலந்துரையாடல்

தென்தமிழீழமக்களின் நிவாரண நடவடிக்கைகள் பற்றியும், இன்றைய பாடசாலைகளின் அடிப்படைப் பிரச்சினைகளையும் கலந்துரையாடுவதற்கு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ் மாவட்டக் கல்விப்பிரிவு, உதவிக் கல்விப் பணிப்பாளரையும், கொத்தணி அதிபர்களையும், பாடசாலை அதிபர்களையும் தவறாது கோட்ட ரீதியாக சமுகம் தரும்வண்ணம் அறிக்கை ஒன்றின் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது

1. யாழ் கோட்டத்திற்கான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி மண்டபத்திலும்,

2. மருதனாமடக் கோட்டத்திற்கானகலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு யா/ இராமநாதன் கல்லூரி மண்டபத்திலும்,

3. தென்மராட்சிக் கோட்டத்திற்கானகலந்துரையாடல் நாளை சனிக்கிழமை முற்பகல் 9-00 மணிக்கு யா/ திபேக் கல்லூரி மண்டபத்திலும்,

4. வடமராட்சிக் கோட்டத்திற்கான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு யா/ வட இந்து மகளிர் கல்லூரி மண்டபத்திலும்,

5. பண்டத்தரிப்புக் கோட்டத்திற்கானகலந்துரையாடல் 17-12-90 திங்கட்கிழமை முற்பகல் 9-00 மணிக்கு யா/ பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியிலும்,

6. வேலணைக் கோட்டத்திற்கான கலந்துரையாடல் 17-12 90 திங்கட்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு யா/ வேலணை மத்தியமகா வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளன.

## மாற்றம் செய்யும் அதிகாரமில்லை

யாழ். மாவட்டத்திலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச்சங்க கிளைக்குழு உறுப்பினர்கள் எவருக்கும் உலர் உணவு விநியோக அட்டையில் மாற்றம் செய்வதற்கு அதிகாரமில்லை என்றும் உதவி அரசாங்க அதிபர், இராமசேவகர்கள் போன்றவர்களுக்கே மேற்படி அட்டையில் மாற்றம் செய்வதற்கு அதிகாரம் உண்டு என உதவி உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரி தெரிவித்துள்ளார்.

சில இடங்களில் இந்த விடயத்தில கிளைக்குழு உறுப்பினர்கள் தலையிட்டதாகத் தெரிவித்த புகார்களை அடுத்தே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (க)

## ஒருநாள்

(யாழ்ப்பாணம்)

தென்தமிழீழ மக்களின் துயர்துடைப்பு நிவாரணத்துக்கு உதவுவதற்காக நல்லூர் உதவி அரசாங்க அதிபர் அலுவலக உத்தியோகத்தர்களும், மேற்படி உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த கிராம சேவையாளர்களும் தமது ஒருநாள் சம்பளத்தை வழங்க முன்வந்துள்ளார்கள். நல்லூர் உ. அ. அதிபர் ஆ. மகாலிங்கம் இதற்கானஏற்பாடுகளைச் செய்துள்ளார். (44)

## 45 நாட்களுக்குள் சேமலாபநிதி வழங்க ஏற்பாடு

போக்குவரத்துச்சபை ஊழியர்கள் ஓய்வுபெற்று 45 நாட்களுக்குள் ஊழியர் சேமலாப நிதியை வழங்க நடவடிக்கை எடுக்கபபட்டுள்ளது.

போக்குவரத்து இராஜாங்க அமைச்சு இதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டதாகக் கூறப்படுகிறது.

நேர்முகப்

களில் காலை 8-30 மணிக்கும் யாழ்ப்பாணக் கோட்டத்திற்கு 19, 20ஆம் திகதிகளில் பிற்பகல் 1 மணிக்கும். மருதனாமடம் கோட்டத்திற்கு,21, 22,24 ஆம் திகதிகளில் பி. ப. 1 மணிக்கும், 27 ஆம் திகதி காலை 8-30 மணிக்கும், வேலணைக் கோட்டத்திற்கு 22, 24ஆம் திகதிகளில் காலை 8-30 மணிக்கும் தென்மராட்சிக் கோட்டத்திற்கு 24, 26 ஆம் திகதிகளில் காலை 8-30 மணிக்கும் பண்டத்தரிப்புகோட்டத்திற்கு 27, 29 ஆம் திகதிகளில் காலை 8-30 மணியில் இருந்து மாலை 5 மணிவரையும் இந்த நேர்முகப் பரீட்சைகள் நடைபெறும்.

இந்த பரீட்சைசகான அனுமதி அட்டைகளை தத்தமது கோட்டக்கல்வி அலுவலகங்களில் அடையாள அட்டையைக் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மு)

விசேட

ஆ. துரைராஜா நேற்று கூறினார்.

மேலும் வடக்குக் கிழக்கு மாணவர்களுக்கு இந்தப் பரீட்சை நடைபெறாது போனால் மலையக மக்கள் மட்டும் பல்கலைக்கழகத்தில் பயில வேண்டிய ஒருகட்டாய நிலைஏற்படஉள்ளதுஇதனால் திறமைமிக்க ஒரு அறிவு படைத்தசந்ததி பின் தங்க வேண்டி ஏற்படும் எனவும் அவர் கூறினார் (லோ)

ஜனசக்தி

தும் அறிந்ததே.

எதிர்வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் ஒவ்வொரு திங்களிலும் யாழ். தேசிய சேமிப்பு வங்கிக்கிளையில் இதற்கான கருமபீடம் செயல்படத் தொடங்குமென தெரியவருகிறது. (21)

கிறிஸ்மஸ்

அவலக் காட்சிகளைக் கொண்ட இந்த மடல்களில் ஏற்கனவே பலவிரண்டாயிரம் அட்டைகள் லண்டனில் விற்பனையாகியுள்ளன. (மு)

தாயகத்தை

வரை இரட்டை அங்கத்தவர் தொகுதியாக இருந்த மூதூர் தொகுதியை மூதூர், சேருவாவில என இரண்டாகப்பிரித்து திருக்கோணமலை மாவட்டத்தில சிங்களவர் பிரதிநிதித்துவம் பெற வழிவகுத்தனர் என்பது தெரிந்ததே.

அதேவேளை, தற்போதைய தாரைவாக்கும் திட்டம் அமுல்படுத்தப்பட்டால் தமிழர் தாயகம் பல துண்டுகளாகப் பிரிவுபடும் என்பது குறிப்பிடத்தக்கது.

## மரண அறிவித்தல்

### செல்லையா கனகம்மா

செல்லையா கனகம்மா காலமானார். அன்னார் செல்லையாவின் மனைவியும். கமலாதேவி, ஆனந்தம், (உரிமையாளர், ஆனந்தா ஸ்ரோர்ஸ் காலி) வரதராசா (பிரான்ஸ்), தியாகராசா, சற்குணராசா, லோகராசா, சோதிமலர், விமலாதேவி, தனலட்சுமி, சந்தானலஷ்மி (பிரான்ஸ்), ஆகியோரின் தாயாரும், சிவபாதசுந்தரம், நடராசா, நாகேஸ்வரி, இராசலிங்கம் (பிரான்ஸ்), சத்தியவான், கமலநாதன் (பிரான்ஸ்), சகுந்தலாதேவி, ஜெயவதி ஆகியோரின் மாமியாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் 15-12-90 நாளை சனிக்கிழமை காலை 10 மணியளவில் இல 31, பெரியதம்பிரான் வீதி, வண்ணார்பண்ணை இல்லத்திலிருந்து தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
செ. ஆனந்தம்

(R-927)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.